உ

ஸ்ரீவாணீ சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௯. | 1918-ம் ஆ௵ பிப்ரவரி ௴ | இதழ் ௨.

திருக்குறள் வியாசம்.

௫-ம் அதிகாரம்.

இல் வாழ்க்கை.

இல்வாழ்க்கையாவது இல்லாளோடு கூடிவாழ்தல். இவ்வாழ்க்கையின் சிறப்பு மிகப் பெரிதாகும். எங்ஙனமெனிற் கூறுதும்:

உலகின்கண் ஆச்சிரமிகள் நான்கு வகைப்படுவர். அவர் பிரமசாரி, இல்வாழ்வோன், வானப்பிரத்தன், சந்நியாசி என்பவர். ஆசிரியனிடத்தினின்று ஓதுதலும் விரதங் காத்தலுமாகிய ஒழுக்கமுடையவன் பிரமசாரியாவன். இல்லறத்தின் வழுவாது மனையாளோடு கூடி வாழ்பவன் இல்வாழ்வோன். இல்லைவிட்டு வனத்தின்கண் தீயொடுசென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கமுடையவன் வானப்பிரத்தன். முற்றத் துறந்த யோகவொழுக்கமுடையவன் சந்நியாசியாம். இவருள் இல்வாழ்வோனே மற்றைய மூவர்க்கும் உற்றதுணையாக நிற்கின்றான். பசி, நோய், குளிர் முதலியவற்றால் அவவொழுக்கங்களுக்கு இடையூறு வாராமல், உண்டி, மருந்து, உறையுள் முதலியவற்றை யுதவி, அவ்வொழுக்க நெறி

களிலே அவர்களை வழுவாமற் செலுத்துகின்றான். ஆகவே 1. 'இல்லறத்தோடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுவோன், அறவியல்பினையுடைய மற்றைய மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறியின்கண் நிலைபெற்ற துணையாவான்' என்க. அம்மட்டோ! ஆதரவற்றவர்க்குப் பாவமொழிய அவர்க்கு ஆதரவாய் நின்று வேண்டுவன செய்கின்றான். வறுமைப்பட்டவர்க்கு உணவு முதலியவற்றை யுதவுகின்றான். இறந்தவர்க்கு நீர்க்கடன் முதலியவற்றைச் செய்து நல்லுலகின்கட் செலுத்துகின்றான். ஆகலால், 2. 'ஆதாரமானவராலே விடப்பட்டார்க்கும், வறுமைப்பட்டவர்க்கும், ஒருவருமின்றித் தன்பால் வந்து இறந்தவர்க்கும், இல்வாழ்வானென்று சொல்லப்படுவோனே துணையாகின்றான்.' இங்ஙனம் இல் வாழ்க்கை எல்லா வுபகாரத்திற்கும் உரியதாயுள்ளது.

இனி இல்வாழ்வோன் அறஞ் செய்யுமாறு கூறுவோம். இவன் தன் முன்னோர் நன்மையின் பொருட்டுப் பிதிர் கடன்களைச் செலுத்தல்வேண்டும். பிதிராவார், படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி. பின்னர்த் தேவர்களை வழிபடல் வேண்டும். முன் அறி முகத்தால் குறித்துவந்தாரும் அஃதின்மையில் குறியாது வந்தாருமாகிய இருவகை விருந்தினரையும் உபசரித்தல்வேண்டும். சுற்றத்தவரை ஆதரித்தல்வேண்டும். எல்லா அறங்களும் தான் இருந்தே செய்ய வேண்டுதலின் தன்னையும் பாதுகாத்தல் வேண்டும். இங்ஙனம் 3. 'பிதிர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று சொல்லப்பட்ட ஐந்திடத்தும் செய்யப்படுகின்ற அறநெறியை வழுவாமற் செய்தல், இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாகும்.' இவ் வைந்திடத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலினாலேயே முற்

---

1. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
   நல்லாற்றி னின்ற துணை.
2. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
   மில்வாழ்வா னென்பான் றுணை.
3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
   கைம்புலத்தா றோம்ப றலை.

காலத்தில் அரசர்க்கு இறைப்பொருள் ஆறிலொருபங்காயிற்றென அறிக. இங்ஙனம் அறஞ்செய்வோன் அதற்கு வேண்டிய பொருளை நல்வழியால் தேடல் வேண்டும். அப் பொருளைக் கொண்டு செய்யும் அறந்தான் நன்மை பயக்கும். தீய வழியில் வந்து பிறன்பொருளைப் பகுத்துண்ணின் அறம் பொருளுடையார் மேலும் பாவம் தன் மேலுமாய் நின்று தீமையையே பயக்கும். ஆதலின், 4. 'பொருள் தேடுங்கால் பாவத்துக்கு அஞ்சித் தேடி அப் பொருளை முற் கூறிய அறவியல்பினையுடைய மூவர் முதலாயினார்க்கும், தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பங்கிட்டுத் தான் உண்ணுதலை ஒருவன் இல்வாழ்க்கையானது உடையதானால், அவன் சந்ததி உலகத்தில் எந்நாளும் நிற்றலல்லது அழிவதில்லை.' மேலும் இல்வாழ்க்கையில் மனையாளுக்கும் கணவனுக்கும் உள்ளம் ஒன்றுபட்டிருத்தல் வேண்டும். அவர்கள் உள்ளம் ஒருப்படாவிடத்து இல்லறம் முடிவுபெறாது. ஆகவே, 5. 'ஒருவன் இல் வாழ்க்கையானது, தன் மனைவியிடத்துச் செய்யத்தகும் அன்பினையும், பிறர்க்குப் பகுத்துண்ணுதலாகிய அறத்தினையும் உடைத்தானால் அவ் வுடைமையானது அவ் வில்வாழ்க்கைக்குப் பண்பும் பயனுமாகும்' என்க.

இல்லறத்தையும் துறவறத்தையும் இப்போழ்து சீர்தூக்குவோம். பழி பாவங்கட்கு அஞ்சிப் பிறர்க்குப் பகுத்துண்ணுதலும் மனைவிமாட்டு அன்புகொள்ளுதலுமாகிய இல்லற நெறியில் நிற்கும் ஒருவன் உலகத்தில் அடையாத பேறும் உளதோ? அவனுக்கு எல்லாப் பேறும் எளிதிலே கைகூடும். அவன் வனத்திற்குச் செல்லவேண்டுவதுமில்லை, துறவறம் கொள்ள வேண்டுவதுமில்லை. 6. 'ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவானாயின், அவன் அதற்குப் புறமாகிய வழியிலே

---

4. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் லெஞ்ஞான்று மில்.
5. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.
6. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

போய்ப் பெறும் பயன் யாது?' ஒன்றுமில்லை. இன்னும் இல்வாழ்வோன் வனத்திற் சென்று தவஞ் செய்யும் வானப்பிரத்தரெல்லாருள்ளும் மிக்கவனாகின்றான். ஏன்? அங்ஙனம் வனத்திற் சென்று தவஞ் செய்தலாகிய முயற்சியின்றியே பெறுதற்குரிய பயனைப் பெறுகின்றானன்றோ? ஆகவே, 7. 'இல்வாழ்க்கையிலே நின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவோன், ஐம்புலன்களை விட முயற்சிசெய்வாரெல்லாருள்ளும் மேற்பட்டவனாவன்' என்பதில் ஐயமேயில்லை. அன்றியும், அத் தவஞ் செய்வார் நிலையினும் இல்வாழ்க்கை நலமுடையதாகக் காணப்படுகிறது. எப்படியெனில், தவஞ் செய்பவர்கள் தங்கட்கு உற்ற நோயைமட்டும் பொறுப்பர். பிறரையுற்ற நோயைப் பொறுப்பதில்லை. இல்வாழ்வாரோ தமக்கு வந்த நோயுமன்றிப் பிறர்க்கு வந்த நோயையும் பொறுக்கின்றனர். எனவே 8. 'தவஞ் செய்வாரையும் தத்தம் வழியில் ஒழுகச் செய்து தானும் தன் அறத்தினின்றும் தவறாத இல்வாழ்க்கையானது, அத்தவம் செய்வாரது நிலையினும் பொறுமையை யுடையது' என்பது நன்கு விளங்கும். மேலும், துறவறத்தைவிட இல்லறமே எளிதானது. துறவறம், மனத்தையும், மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் பொறிகளையும் ஒறுத்து அடக்க வேண்டிய வருத்தமும் அருமையுமுடைய வழி. அது நிறைவேறுவது அரிது. இல்லறமோ அவற்றை அடக்க வேண்டிய வருத்தமின்றி ஐம்புல இன்பங்களை ஆரத்துய்க்கும் மேன்மையுடைய வழி. இது நிறைவேறுவது எளிது. 9. 'இருவகையறத்தினும் நூல்களால் அறமென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே. மற்றைத் துறவறமோவென்றால், அதுவும் பிறனாற் பழிக்கப்படுவது

---

7. இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

8. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

9. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

இல்லையானால் அவ் வில்வாழ்க்கையோடு ஒரு தன்மையாக நன்றாம்.' இவற்றால் இல்லறமே பயனுடையதென்பது வெள்ளிடைவிலங்கலாயிற்றென்க.

ஆதலின், 10 'இல்லறத்தோடுகூடி வாழுமியல்பினால் மண்ணுலகத்துள் வாழ்பவன், மண்ணுலகத்தானே யாயினும் விண்ணுலகத்திலிருக்கின்ற தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படுவன்.' பின்னே தேவனாகப் பிறந்து அவ் வறப்பயனை நுகர்தல் உறுதியென்க.

இதுகாறும் கூறியவாற்றால், இல்வாழ்வான், பிரமசாரி முதலிய மற்றைய மூன்று ஆச்சிரமிகட்கும் ஆதாவற்றவர்க்கும் வறுமையுற்றவர்க்கும் தன்பால் வந்து இறந்தவர்க்கும் துணையாக நிற்றலின் இல்வாழ்க்கையானது எல்லா வுபகாரத்திற்கும் உரியதாயுள்ளதென்பதும், தென்புலத்தார் முதலிய ஐவர்க்கும் செய்தற்குரிய அறங்களைச் செய்ய வேண்டுவது இல்வாழ்வானுக்குரிய கடமையென்பதும், பாவத்திற்குப் பயந்து பொருள் தேடிப் பங்கிட்டு உண்ணும் ஒருவன் சந்ததி குறைதலில்லை யென்பதும், இல்வாழ்க்கையானது அன்பையும் அறத்தையும் உடையதாயிருத்தல் வேண்டுமென்பதும், இல் வாழ்க்கையை அதற் குரிய வழியிலே செலுத்தின் ஒருவன் துறவறத்தை மேற்கொள்ள வேண்டியதில்லை யென்பதும், இல்லறத்தில் வாழ்பவன் தவஞ் செய்வாரெல்லாருள்ளும் தலையாவான் என்பதும், இல்லற நிலையானது தவஞ் செய்வோர் நிலையினும் பொறுமை யுடையதென்பதும், அறமென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்வாழ்க்கையே யாகுமென்பதும், இல்லறத்து வழுவாது வாழ்பவன் தெய்வத்துள் ஒருவனாக மதிக்கப்படுவான் என்பதும், பிறவும் பெறப்பட்டன.

---

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

அறப்பூங் கொத்து.

அறஞ்செய விரும்பு. தருமத்தைச் செய்தற்கு நீ ஆசைகொள். அறம் புகழையும் இன்பத்தையும் விளைக்கும். மறம் (அதர்மம்) செய்ய விரும்பாதே. அது பழிப்பையும் துன்பத்தையும் உண்டுபண்ணும். அறத்தின் பயன் அளவில. அறப்பயனை யறிவதற்கு நூலளவை வேண்டுவதில்லை. பல்லக்கில் ஏறி மகிழ்பவனிடத்தும் அதனைச் சுமந்து வருந்துபவனிடத்தும் கண்கூடாகக் காணலாம். பொருளுடையவரே பல்வகையிலும் அறம் செய்வதற்கு உரியவர். நிலையாத பொருள் நிலைத்திருக்கும்பொழுதே அவர்கள் அறத்தைச் செய்து பயன்பெறல் வேண்டும். இல்லையேல் அப் பொருளால் அவர்களுக்கு யாதொரு பயனுமில்லை. குங்குமப்பொதி சுமந்த கழுதைக்கு அக் குங்குமத்தால் யாது பயன்? பொருள் இருந்தால்தான் அறஞ் செய்தல் கூடும் என்று நினைப்பது தவறு. பொருளில்லாதவர்களும் ஆறம் செய்யலாம். மனத்தால் நல்லவைகளை நினை. வாக்கால் பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களைச்சொல். உடம்பால் பிறர்க்கு நன்மை விளையும் செயல்களைச் செய். இவையெல்லாம் அறமேயாகும். இவற்றிற்குப் பொருள் வேண்டுவதில்லையே. சமயம் நேரும்போதெல்லாம் இவற்றைக் கைவிடாதே. இதைவிட உலகில் நீ செய்யத்தகும் நற்காரியம் என்ன இருக்கிறது? மனத்தால் தீயவற்றைச் சிந்தித்தலும், வாக்கால் தீயவற்றைச் சொல்லுதலும், காயத்தால் தீயவற்றைச் செய்தலும் மறமாகும். அதனை ஒருபோதும் செய்யற்க. உலகில் பழிப்பையும் துன்பத்தையும் அடைய விரும்புவாருளரோ? புகழையும் இன்பத்தையும் அடைய விரும்பாதாருளரோ? ஆதலின் தீமை விளைக்கும் மறத்தை அறவே விட்டு நன்மை பயக்கும் அறத்தையே என்றும் செய்க.

* * *

ஆறுவது சினம். உனக்குள்ளே தணியத்தகுவது கோபமேயாம். சினத்தின் கொடுமையைச் செப்ப முடியுமோ! சினமே கொலை முதலிய பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தை. மூங்கிலிற் பிறந்த நெருப்பானது முதலில் தான் பிறந்த இடத்தைக் கொளுத்திவிட்டுப் பின்னரே மற்றொன்றைப் பற்றுகிறது. அதுபோல ஒருவன் உள்ளத்தே யெழுந்த சினத் தீயானது முதலில் அவனுள்ளத்தை யெரிக்கின்றது. பொறுமை முதலிய நற்குணங்களை யழிக்கின்றது. பின்னரே வெளியிற் செல்கின்றது. பல இடுக்கண்களை யுண்டுபண்ணுகின்றது. உன்னிடத்துச் சினமெழுந்த காலத்தே உன் உள்ளம் எப்படிப் பொங்குகின்றது? அப்போது

கண்ணாடி எடுத்து உன் முகத்தைப் பார். உன் கண்களைப் பார். உனது நகைமுகம் எங்கே? உனது குளிர்ந்த பார்வை யெங்கே? என்ன கோர உருவம்! என்ன மனச்சுழற்சி! என்ன துன்பநிகழ்ச்சி! இப்படிப் பிறந்த போதே உன்னை ஆட்டி அலைக்கின்ற அச்சினப் பேயின் கையில் நீ அகப் படாதே. அதற்குச் சிறிதும் இடங்கொடாதே. நீ உன்னினும் வலிய வரைச் சினந்தால் அவர்களால் நீ துன்புறுத்தப்படுகின்றாய். உன்னோ டொத்தவரைச் சினந்தால் நீ செய்வது அவர்களால்செய்யப்பட்டு நீங்கள் இருவருமே துன்பமடைகின்றீர்கள். உன்னினும் மெலியவரைச் சினந் தால் நீ உலகில் பழிப்பையும் பாவத்தையும் அடைகின்றாய். இப்படி எவ் விடத்தும் சினம் தீமையையே யுண்டுபண்ணுகின்றது. இச் சினத்தை விட உனக்கு வேறுபகை யாது? சினமற்றவர்க்குப் பகைவரேயில்லை. இச் சினமுள்ளவளவும் நீ உலகத்திற்குப் பயன்படமாட்டாய். முதலில் இப் பகைவனையொழிக்க முயற்சிசெய். அறிவென்னும் தண்ணீரே அச்சினத் தீயை அவிக்கவல்லது. ஆதலின் அறிவைப்பெற்றுச் சினத்தை அடக்குக.

*
* *

இயல்வது கரவேல். உன்னால் கொடுக்கக்கூடியதை இரப்ப வர்க்கு ஒளிக்காதே. அது கடும்பற்றுள்ளமுடையவர் (உலோபிகள்) செயலாகும். கடும்பற்றுள்ளமுடையவர் தாமும் உண்ணார். பிறர்க்கும் உதவார். அவர்கள் பொருள் தேடிக் கண்டது வருத்தமே யன்றி வேறென்னை? பலரால் இகழப்படும் அவர்கள் உலகத்தில் இருந்தென்? இறந்தென்? உனக்குக் கிடைத்த பொருளை மற்றவர்க்கும் பங்கிட்டுண் ணுதல் உனது கடமையாகும். என்? அது பலபேர் உழைப்பின் பய னாக வந்ததன்றோ? பலபேர் உழைப்பினால் வந்த பொருள் ஒருவனுக்கு மட்டும் எப்படி உரியதாகும்? சிலர் பசித்திருக்கச் சிலர்மட்டும் தம் வயிற்றை நிரப்பிக்கொள்வது மக்கள் செயலாகுமோ? அது மாக்கள் (மிருகங்கள்) செயலே யாகும். உணவு முதலியவை யில்லாத மான முள்ள வறியர்கள் உன்னிடம் வந்து ஒன்று கேட்கும்போது, முகப் பொலிவு குன்ற அவர்கள் நெஞ்சம் படுகின்ற பாட்டை நீ அறிவாயானால், அவர்கள் வாய்திறந்து கேட்குமளவும் உன்னெஞ்சம் பொறுக்குமோ? குறிப்பறிந்து ஈதலே கொடை யென்று கூறுவர் பெரியோர். வறியவர் விரும்பியதொரு பொருளை மறைக்காது நீ கொடுத்தாயானால் அவர்கள் உள்ளம் எவ்வளவு களிப்படையும்! அதைப் பார்த்த உனக்கு எவ்வளவு மகிழ்ச்சியுண்டாகும்! கொடுத்து மகிழும் இன்பத்தை அறிவுடையாரே அறிவர். ஆதலின், உன்னால் கொடுக்கக் கூடிய பொருளை உன்பால் வந்து ஏற்றவர்க்கு ஒருபோதும் இல்லையென்னாமல் கொடுத்து இன்பம் அடைக.

கலைமகள் வாழ்த்துப் பாக்கள்.

ஞானக் கடல்கடைந்து நல்லமுத மேந்தியுல
கீனக் கடையழிக்க வென்றெழுந்தாள் — வான
மலைமகளும் பூமகளு மண்மகளுஞ் சாற்றுங்
கலைமகளார் பூம்புதுவைக் கண்.

சித்திவளர் மெய்ஞ்ஞானச் செல்வநிலை யையறிந்த
பத்திவளர் பங்காருப் பாவலர் — இத்தரையிற்
பல்லாண்டு வாழ்க படிப்போர் உதவியவர்
பல்லாண்டு வாழ்க பரிந்து.

செந்தமிழ்க்கவி - **K. V. இராமசந்திரையர்,**
திருவண்ணாமலை.

செவ்வாய்.

ஸ்ரீமான் பகவான் தாஸ் என்பவர் மூர்கல்லூரி சாஸ்திர ஆராய்ச்சிச் சங்கத்தில் செவ்வாய்க் கிரகத்தைப்பற்றி ஆங்கில பாஷையில் செய்த உபந்நியாசமொன்று லீடர் எனும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. வான சாஸ்திர ஆராய்ச்சி குன்றிக் கிடக்கும் இக் காலத்தில் அவ்வுபந்நியாசத்தில் சொல்லி யிருக்கும் அற்புத விஷயங்களைத் தமிழில் சுருக்கி எழுதிப் பிரசுரிப்பது நம்மவர்களுக்குப் பயன் தரும் எனும் நம்பிக்கையுடன் இதனை எழுதத் துணிந்தேன்.

சூரிய மண்டலத்தினின்று உள்ள தூரத்தினால் அளவிடுங்கால் பூமண்டலத்திற்கு அடுத்தது அங்காரக மண்டலமாகும். இது நமது பூமிக்குச் சமீபத்திலிருப்பதால் ஆதி காலந் தொட்டு நம்மவர்கள் இந்தக் கிரகத்தைப்பற்றி அதிக கவனத்துடன் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். மேலும் அது தன் மேகங்களால் விசேஷமாய் மறைபடாமலிருப்பதால் அதன் அமைப்பை நாம் அதிக திருத்தமாய்க் கண்டறிய இடங் கொடுக்கின்றது. வெள்ளியை (சுக்கிரனை)ப்போல் இது எப்போதும் தன் மேகங்களால் மறைபட்டிராமையால் நாம் அதன் மேற் பரப்பைத் தெளிவாய்ப் பார்க்கக்கூடுமா யிருக்கின்றது. சந்திரனுக்குப் பிறகு நமது மனம் செவ்வாயையே பற்றுகின்றது. இதுகாறும் செய்த நிரீட்சணங்

களும் ஆராய்ச்சிகளும் இந்தச் செவ்வாயில் மனிதர்கள் வசிக்கின்றார்களா என்பதைக் கண்டறிவதற்கே செய்யப்பட்டிருக்கின்றன. அங்குள்ளார் இப் பூவுலகோரைப்போல் நடை உடை முதலியன உள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பதல்ல. அந்த மண்டலத்தின் நிலைமைக்குத் தக்கவாறு பிராணிகளின் உருவ முதலியவைகளில் வேறுபாடு காணப்படலாம். எவ்வித மாற்றமிருப்பினும் சரி, அதில் மனிதர் வசிக்கின்றனரா என்று கண்டுபிடிப்பதே நமது நோக்கம். ஆனால் இவ் விஷயத்தைக் கண்கூடாக் காண்பது அசாத்தியமாகையால் எந்தவிஷயத்தை வான நிரீக்ஷணத்தால் அனுமானிக்க அதிக காரணங்களுண்டோ அதை உண்மையென்றே அங்கீகரிக்கவேண்டும்.

நமது பூமியிலிருப்பதுபோல் செவ்வாயிலும் உயிர்கள் வாழ்கின்றனவா என்பதை நிச்சயிப்பதற்கு முதலில் அது பிராணிகள் வசிப்பதற்கு யோக்கியமான நிலைமையில் இருக்கின்றதா என்பதையும், பிறகு அதில் ஜீவ ஜாதிகள் உறையும் சின்னங்கள் ஏதேனும் காணப்படுகின்றனவா என்பதையும் நாம் அறிய வேண்டும்.

பூமியும் செவ்வாயும் சூரியனைச் சுற்றி அண்டாகாரமான பாதைகளிற் சுழல்கின்றனவென்றும், செவ்வாய் பூமிக்கு வெளிப்புறமாயிருக்கின்றதெனவும், பூமியைப்போலவே செவ்வாயும் உயிர் வாழ்க்கைக்குப் போதுமான உஷ்ணத்தையும் பிரகாசத்தையும் சூரியனிடமிருந்து பெறுகின்றதெனவும் ஐயமற நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் செவ்வாயானது அதன் ககன மார்க்கத்தினின்று 25 பாகை சாய்ந்து நிற்கும் ஒரு மனோபவ மேருவைச் சுற்றி 24 மணி 40 நிமிஷத்தில் ஒருதரம் சுழன்றுகொண்டிருக்கின்றதென்றும் ருஜுப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் அநேகமாய்ப் பூமியிலிருப்பது போலவே செவ்வாயிலும் தினங்களும் வசந்தம், கோடை, வறளை, மாரி முதலிய ருதுக்களும் உண்டு. ஆயினும் இதன் மேரு பூமியின் மேருவைவிட அதிக சாய்வுள்ளதாகையால் பருவக் காலங்கள் நீண்டும் சீதோஷ்ணங்கள் அதிகமாயும் இருக்கும்.

இது நிற்க: நமது புத்திக்கு எட்டியவரையில் எவ்வித உயிர் வாழ்க்கைக்கும் ஆகாயமும் நீரும் இன்றியமையாதனவென்று தெரியவருகின்றது. ஒருகிரகத்தின் இயற்கை உஷ்ணம் குளிர்ச்சிபெற்றால் ஆவி ரூபமாயுள்ள அதன் கணங்களெல்லாம் கனவஸ்துக்களாகவும், திரவ பதார்த்தங்களாகவும் வாயுவாகவும் மாறுகின்றன. ஒரு கிரகத்தைச் சுற்றி ஆகாயமில்லாமலிருக்க அதன் உள்ளிருக்கும் உஷ்ணமும் மேற் பரப்பிலுள்ள

வைகளை இயக்கச் சக்தியற்றவிதமாய்க் குளிர்ந்துபோய்விட்டால் அதன் இயல்பான மாறுதல்களும் தோற்றங்களும் ஒரே நிலையில் நின்றுவிடுகின்றன. சந்திரனில் உட்சூடெல்லாம் குளிர்ந்துபோய் மேற் புறத்திலும் ஆகாயமில்லாமையாற்றான் அதை நாம் ஜீவனற்ற கிரகமென்று சொல்லுகிறோம்.

(தொடரும்)

சு. சுவாமிநாத தீக்ஷிதர், B. A., L. T.,

புதுவை.

கோவூர்க் கிழார்.

(வெண்டாமரை சு, இதழ் க, 10-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆவூர் முற்றுகை.

"மூத்தோர் சோல் வார்த்தை யமிர்தம்" என்பதை வேத வாக்காகக் கொண்டு போரை விட்டுச் சென்ற நலங்கிள்ளி தன்மையை இன்னதென்று உணர்ந்துகொள்ளாமலே நெடுங்கிள்ளி தனக்குள், நமது போர்த் திறமைக்கும், புய வலிமைக்கும் ஆற்றாது அஞ்சிப் பகைவன் தன் சேனையோடு மறைந்தான். இங்ஙனம் கரந்தோடிய கிள்ளியை வெற்றி கொள்ளுதல் எளிதன்றோ? ஆனதால் அவனோடு போர் புரிய இன்றே படையெடுப்போமெனத் தீர்மானித்துத் தன் சேனையுடன் நலங்கிள்ளிக்குச் சொந்தமான * ஆவூரைப் பிடித்துக்கொண்டான். இவ் விஷயத்தை ஒற்றர் மூலமாய்க் காவிரிப்பூம் பட்டினத் திருந்த நலங்கிள்ளி கேட்டுப் பகைவனின் அக்கிரமச் செயலுக்கு மிகவும் கோபித்துக் கூற்றுவன் போலக் கொதித்தெழுந்து தனது பெரும் படையுடன் விரைந்து ஆவூரை முற்றுகையிட்டு உள்ளே யிருப்பார்க்கு உணவாவது, நீராவது போய்ச் சேராதபடி காவலமைத்தனன். இம் முற்றுகை பல நாளாக நிகழ்ந்தமையால் கோட்டைக்குள்ளிருந்த ஆண் பெண் இருபாலார்க்கும், பிராணிகளுக்கும் நேர்ந்த பெருந் துன்பம் அதிகம். இசனைக் கேட்டுச் சகிக்கலாற்றாது ஆங்கு வந்த கோவூர்க்கிழார், கோட்டையை அடைத்துக் கொண்டிருந்த நெடுங்கிள்ளிபால் "சாந்தனையுந் தீயனவே செய்திடினும் தாமவரை ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்" என்பதைக் காட்டவும்,

---

* இது தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூகாவில் உள்ளதோர் சிற்றூர்.

கை, புகழ் கருதாது நாவினுக்கு இனிய உணவையூட்டுவதுபோலும், தாம் வருந்தியும் பிறர்க்குறும் இடுக்கண் ஒழித்து நன்மை புரியும் மேலோர் நெறியை உணர்த்துவதற்குமாகத் தாமே வலியச் சென்று "ஓ வேந்தே! நான் முன்னமே சொல்லியும் நீ கேளாதொழிந்தனை, இப்பொழுதேனுங் கேட்பாயாக:—

"யானைகளெல்லாம் குளியாமலும், நெற்கவள முதலியவற்றைப் பெறாமலும், நிலத்தின்மீது புரளுங் கைகளையுடையனவாய்ப் பெருமூச்சுவிட்டு இடிபோல முழங்கவும், கோட்டைக்குள்ளிருந்த மகளிர் ஆகாரமின்றிப் பசியாலும் பட்டினியாலும் வருந்தியதால் பாலில்லாமல் குழந்தைகள் அழவும், மங்கையர் மலர் சூடாமலே வருத்தத்தால் வறுந்தலை முடிப்பவும், அருந்துவதற்கு நீரின்றிக் குடிகள் ஓலமிட்டலறவும், இவற்றிற்கெல்லாம் நாணாமல் இவ்விடத்து நீ இனிதாக விருத்தல் கொடியது. நீ அறமுடையவனானால் (உன் பகைவனாகிய நலங்கிள்ளிமுன்) இக்கோட்டை உனதல்லவா என்று சொல்லித் திறத்தல்செய்வாயாக. அன்றி வீரமுடையவனானால், யுத்தஞ்செய்து திறந்துவிடுவாயாக. இரண்டுமின்றித் திறவாமல் அடைக்கப்பட்ட கோட்டையில் ஒரு பக்கத்தே நீயொதுங்கியிருத்தல் ஆராயுமிடத்து மிகவும் நாணுந் தன்மையுடையது" என்னுங் கருத்துப்பட,

"இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்
தலமரல் யானை யுருமென முழங்கவும்
பாலில் குழவி யலறவு மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவு நீரில்
வினைபுனை நல்லி லினைக்கூஉக் கேட்பவு
மின்னா தம்ம வீங்கினி திருத்த
றுன்னருந் துப்பின் வயமான் றோன்ற
லறவை யாயி னினதெனத் திறத்தன்
மறவை யாயிற் போரொடு திறத்த
லறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவி
னீண்மதி லொருசிறை யொடுங்குத
னாணுத்தக வுடைத்திது காணுங் காலே" (44)

என்னும் பாடலைக் கூறினர். இது கேட்ட நெடுங்கிள்ளி தனது அறியாமைக் கிரங்கிப் பெரிதும் வெட்கமடைந்து, நலங்கிள்ளி யிடமிருந்து மீள்வதற்கு வகை காணாது, முன்போலக் கோவூர்க்கிழார் உரை மறுப்பதற்குங் கூடாதவனாகி, கோட்டையைத் திறந்துவிட்டுத் தனது குற்றங்களை மன்னிக்குமாறு புலவரைப் பெரிதும் இறைஞ்சி, அக் கோவூர்க்கிழாரையே முன்னிட்டு நலங்கிள்ளிபாற் சென்று, "இவ் வாவூரும் பிறவும் எல்லாம் உன்னதே; ஆயினும் அவை எனக்கு இருக்கட்டும்" என்று வேண்டினான். கோவூர்க்கிழாரும் நெடுங்கிள்ளி யாசித்தவாறே செய்யும்படி நலங்கிள்ளிக்குப் பல சமாதானங் கூறினர். ஈகையும் இரக்கமும் தனக்கியற்கையாகக் கொண்ட நலங்கிள்ளி, புலவரும், சோழனும் விரும்பியபடி அவ் வாவூரையும், பிறவற்றையும் கைக்கொள்ளும்படி மகிழ்வுடன் வழங்கி, தான் தனது புகாருக்குச் சென்றனன்.

இளந் தத்தன் துன்ப நிவர்த்தி.

இவ்வாறு நலங்கிள்ளி தன்பால் அன்பு பாராட்டி உதவிபுரிந்த பெருந் தன்மைக்கு நன்றி காட்டி மகிழாது "கற்பிளவோடொப்பர் கயவர்" என்பதற்கு நெடுங்கிள்ளி இலக்காகி, நலங்கிள்ளியிடத்துப் பழமை போல் ஐயமும் மனவெறுப்புமே கொண்டிருந்து வந்தான். இதனிடையில், தத்தன் என்னும் புலவனது சகோதரனான "இளந் தத்தன்" என்னும் புலவன், "புகார்" எனப்படும் காவிரிப்பூம் பட்டினம் சென்று தனது திருந்திய நாவால் கிள்ளிவள்ளலின் கல்வி, செல்வம், புகழ், சீலம், வெற்றி, ஈகை முதலிய சிறந்த உத்தம குணங்களைப் புகழ்ந்து பாடி அவனால் அக மகிழ்ந்து தரப்பட்ட அளவற்ற பரிசில்களைப் பெற்று, உறந்தை யெனப்படும் உறையூரில் செங்கோலோச்சும் நெடுங்கிள்ளிபாலும் அவ்வாறே பரிசு பெறக் கருதி விரைந்து உறையூரடைந்து அரண்மனை சென்று வளவனைக் கண்டான்.

புலவன் வந்த கருத்தை எளிதில் கிள்ளி உணர்ந்தானேனும், ஈந்துவக்கும் இனிமையும், கல்வியின் அருமையும், பாடல்களின் சொன்னயங்களும் அறிந்து மகிழாதவனானதால், புலவனுக்குப் பரிசில் தர மனம் வராமல், கொடுக்காதிருப்பதைப் பிறர் கேட்டு நகைக்காமல் இருக்கும் பொருட்டு ஓர் சூழ்ச்சி கருதி, "இங்குப் பாடவந்த புலவன் பரிசிலன் அல்லன், நமது பகைவனான நலங்கிள்ளியிடமிருந்து ஒற்றாட வந்துளான், இத் தகையனைக் கொலை செய்தலே தகுதி, இவனை இப்போதே கொலைக் களங்கொண்டு சிரச்சேதம் செய்ம்மின்" என்று தனது கொலைஞரிடத்துப் புலவனை ஒப்படைத்து விட்டான்.

நிரபராதியாகிய கவிஞன் கொலைஞர் வசப்பட்டு மரண லோகத்திற்குச் சென்றுகொண்டிருக்கையில், அப்போது ஆங்கு வந்த கோவூர்க்கிழார் விஷயமுணர்ந்து புலவனை மீட்க நினைந்து விரைந்து நெடுங்கிள்ளிபாற் சென்று, "வேந்தே! இவன் உண்மையில் ஒரு பரிசிலனே; ஒற்றன் அல்லன், பரிசிலனது வாழ்க்கை முறையைச் சொல்லுகிறேன் கேள்:-

"வள்ளலா யுள்ளவர்களை நினைத்து, பழுத்த மரங்களை நோக்கிச் செல்லும் பறவைபோலச் சென்று கடத்தற்கரிய வழிகளையெல்லாம் தூரமென்று கருதாமல் கடந்து திருந்தாத நாவால் தம்மாற் கூடியவாறு பலபடியாகப் புகழ்ந்து பாடி அங்கே பெற்ற சம்மானத்தால் மகிழ்ந்து தம் சுற்றத்தாரை யுண்பித்து, நாளைக்கு வேண்டுமேயென மிகுத்து வையாமல் உண்டும், உண் மகிழ்ச்சியுடன் தம்போன்ற யாசகருக்கு வழங்கியும், தம்மைப் பாதுகாக்கும் செல்வரால் பெருஞ் சிறப்பு எதுவாக வருந்தும் இப் பரிசிலார் வாழும் வாழ்க்கை பிறருக்குக் கொடுமை செய்தலை அறிந்ததோ? இல்லை. தம்மைக் கல்வி முகத்தான் எதிர்க்கு மவரை மாத்திரம் புலமையால் வென்று அதனால் செருக்கொடு திரிதலேயன்றி மற்றப்படி உம்மைப்போல வேந்தரொப்பச் சிறப்பினும் மிக்கார்" என்னும் பொருள்பட:-

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடியவென் னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
யோம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண வண்ணாந் தேகி
யாங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாண் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே." (47)

என்று கூறி "இளந் தத்தனை இப்பொழுதே விட்டுவிடுவோயாக" என்றனர். இது கேட்ட நெடுங்கிள்ளி மறுமாற்றம் புகல்வதற்கு வலியற்றவனாகிப் புலவர்தம் ஆணைக்கஞ்சிப் புலவனை விட்டுவிடும்படி கொலைஞர்க்கு உத்தரவிட்டான். என்னே! புலவர்தம் செல்வாக்கு.

(தொடரும்.)

சி. கு. நாராயணசாமிமுதலியார்,
கோயமுத்தூர்.

புகழேந்தி.

(வெண்டாமரை கூ, இதழ் க, 17-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒட்டக்கூத்தனோடு முரணுதலும், முரணை நகர்சார்தலும்.

புகழேந்தி, பாண்டியன் அவையில் ஆஸ்தான வித்வானா யமர்ந்திருந்தபோது பாண்டியனுக்கு ஓர் பெண்மகவு பிறந்தது. அவளைப் புகழேந்தியார் தமது புதல்விபோல எண்ணிச் சீராட்டிப் பாராட்டியதன்றி, தம்மிடத்துள்ள கல்விப்பொருளையும் அவளுக்கு முதற்பொருளாகக் கொடுத்தார். அவளுக்கு எதாவது துன்பம்வரின் அதனைத் தமது போல் நினைத்துவர, அவளும் இவரைத் தனது தந்தையினும் பன்மடங்கு நேசித்து வந்தனள். இதனை இவர் சரிதம் நன்குணர்த்தும். இதனையே புலவர்புராணத்தார்,

அந்நாளின் மதுரைநக ராண்டிருந்த பாண்டியற்கு
மைந்நாக நடைகாட்டோர் மகள்பிறந்தா ளன்னாளைச்
செந்நாவ லோர்புகழச் செந்தமிழிற் பயில்வித்தான்
கைந்நான்கி லாக்கயற்கட் கவுரியெனத் திகழ்ந்தாளே.

அன்னையினு மப்பனினு மான்றநிலைக் குரவனெனப்
பொன்னையிகழ் புகழேந்திப் புலவோனை யவள்மதித்தாள்
மின்னைநிகர் தன்மனைவி விரதமுற்றி யீன்றமகள்
தன்னையொப்ப வென்னவவன் றானும்விழைந் தனன்மாதே.

என நன்குணர்த்தியுளார்.

இவ்வாறு இவர் இருந்து வருகையில் விக்கிரமசோழன் இறந்தான். அவனுக்கு மற்றைய யாவரினும் கூத்தன்பால் அதிக நம்பிக்கை. அன்றியும் ஒட்டக்கூத்தன், விக்ரமன் குமாரன் குலோத்துங்கனுடைய குரு. ஆகவே, இச்சோழன் இறக்குந்தறுவாயில் ஒட்டக்கூத்தனை அழைத்து, அவனைத் தன்குமாரனுக்கு ஓர் ஊன்றுகோல்போல் இருந்து முடிசூட்டுவிக்கவும் மணம்புரிவிக்கவும் நியமித்து இறந்துவிட்டான். அதற்கேற்பவே கூத்தன் குலோத்துங்கனுக்கு முடிசூட்டி, பிறகு அவனுக்குத் திருமணம் செய்விப்பதற்காகப் பாண்டியன் மகளைப்பேசிவரக் குலோத்துங்கன்பாற் செலவுபெற்றுச் சென்றனன்.

கூத்தன் மதுரையை யடைந்து பாண்டியனைக்கண்டு, சமயம் பார்த்துத் தான் வந்தகாரியத்தைத் தெரிவித்தபொழுது, புகழேந்தியாரும் இருந்தனர். பாண்டியன், புகழேந்தி முதலோர் சோழனுக்குப்

பெண்கொடுக்க இசைந்தனர். பிறகு விளையாட்டாகப் பாண்டியன், “ஐய! நும்மரசன் எவ்விதத்தால் உயர்ந்தவன், பெண் கேட்க வந்தீரே” என்றார். உடனே கூத்தர்,

கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானை
கூறுவதுங் காவிரிக்கு வையையோ அம்மானை
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானை
ஆதித்த னுக்குநிக ரம்புலியோ அம்மானை
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானை
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானை
ஊருக்கு றந்தைநிகர் கொற்கையோ அம்மானை
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானை.

எனப் பாடினர்.

அதைக்கேட்ட புகழேந்தியார், “என்னை! நாமிங் கிருப்பதா லென்னபயன்? ஓர்புலவன்வந்து நம்போஷகன்குடியை இகழ்ந்துரைக்க நாம் பொறுத்திருந்தால் நம்புலமையும் புலமையா? அஃது உண்ட வீட்டிற்கு இரண்டகஞ் செய்ததுபோலன்றோ ஆகும்” என எண்ணி,

திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ அம்மானை
சிவன்முடிமே லேறுவதுஞ் செங்கதிரோ அம்மானை
ஒருமுனிவ னேலியிலோ வுரைதெளிந்த தம்மானை
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானை
கரையெதிரே டேறியது காவிரியோ அம்மானை
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானை
பரவைபடிந் ததுஞ்சோழன் பதந்தனிலோ அம்மானை
பாண்டியனார் பராக்கிரமம் பகரெளிதோ அம்மானை.

என்ற பாடலைப் பாடினர்.

இது முதலே கல்விப்போர் ஆரம்பித்தது. பிறகு கூத்தர், “ஐய! ஏன் வீண் சம்பம்! முதலில் உங்கள் நாட்டிற்கு வளம் உண்டுபண்ணும் வையைநதிக்குச் சங்கமமே இல்லையே?” என, நம்புலவர்,

நாரியிடப் பாகருக்குநஞ்சளித்த பாவியென்று
வாரி யிடம்புகுதா வையையே—வாரி
இடத்தும் புறத்து மிருகரையும் பாய்ந்து
நடத்துந் தமிழ்ப்பாண்டிநாடு

என்ற கவியினைப் பாடினர். பிறகு கூத்தர், சோழன் தனது சீடனாதலின் அவன் கல்வித்திறத்தினை வியந்துரைத்தனர். அதனைக் கேட்ட புகழேந்தியார்,

எண்ணீர்மை நூலுக் ககத்திய னாமிவ னென்பதெல்லாம்
வெண்ணீர்மை யன்றி விரகல்ல வேயிவ் வியனுலகில்
பண்ணீர்மை தேரும் பராக்ரம மாறன் பதங்கழுவும்
தண்ணீர் குடித்தல்ல வோகும்ப யோனி தமிழ்கற்றதே.

எனப் பாண்டியன் கல்வித்திறத்தினை வியந்துரைத்தனர். ஒட்டக்கூத்தர், "நிற்க, நம்மரசன் வீரத்திற் கென்ன கூறப்போகிறீர்?

வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதுகுக் கிடான்கவசம்"

(என்ற இரண்டடிகளைப் பாடி மேற்செல்லுமுன்)—"துன்றும்
வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று."

எனப் புகழேந்தியார் பாண்டியன் வீரத்தினைப் புகழ்ந்து பாடி முடித்தனர்.

பிறகு பாண்டியன், ஒட்டக்கூத்தரை மணவினைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறேவினன். மணவினை இனிதே முடிந்தது. அக்காலைப் பாண்டியன், தன்மகள் புகழேந்தியினைத் தன்னினும் பன்மடங்கு நேசித்திருந்தனளாதலின், அவளுக்கேற்ற காலங்களில் புத்திமதிகூறச் சீதனங்களுடன் உடன்போக்கினான். இது பாண்டிமண்டல சதகத்தால் அறியக்கிடக்கும். புகழேந்தியார், தாம் தம் மகள்போன்று நேசித்த பாண்டியன்மகளைப் பார்ப்பதற்குச் சோழநாட்டை அடைய, ஒட்டக்கூத்தன் இதனையறிந்து தன் பழம்பகையினைப் பாராட்டி அவர்க்குத் தளை பூட்டினனென்றும், அவர் அதனால் அங்கேயே பலநாள் தங்கியிருந்ததால் பலர் சீதனமாக அனுப்பப்பட்டவர் என்று சொல்லுவர் என்றும் புலவர் புராணத்தார் கூறுவர்.

"இவனே வலியத் தளையுள் அகப்பட்டுக் கொண்டனன்" என மகிழ்வெய்தினர் ஒட்டக்கூத்தர். புகழேந்தியருடைய செருக்கினை அடக்கவும், அவர் தன்னரசனை இழித்துரைத்தன ராதலின் அதன் மூலமாகத் தனது அரச பத்தியைக்காட்டவும் அவர்பால் பகைமை பாராட்டினன் போலும்! இஃதோர் இழிவு தமிழணங்கிற்கு. இக்காலத்தும் இத்தகைய தமிழ்ப்புலவர் இருக்கின்றனர்.

ஓர்நாள் சோழனுடைய யானை சங்கிலியை முறித்தோடியது. அப்போது ஒட்டக்கூத்தர்,

இன்னங் கலிங்கத் திகல்வேந்த ருண்டென்றோ
தென்னன் றமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா வுன்ற னயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு.

என்ற பாடலைப் பாடினர். அப்போது தான் புகழேந்தியார் வந்துளார். இன்னும் பாண்டியன்பால் நேசம் பிரியவில்லை. ஆகவே இதைக்கேட்டதும் அவர்,

> தென்னவன் றென்னர் பெருமான் றிறன்மதுரை
> மன்னவன் கோக்களிற்றின் வல்லிக்கும்—பொன்னிநா
> டாலிக்கும் வேந்தா மபய குலன்மகளிர்
> தாலிக்கு மொன்றே தலை.

என்ற பாடலைப் பாடினர். இதைக்கேட்ட கூத்தன், "இங்கும் வந்தானே இப்பாவி இலக்கினச் சனியனாய்" என எண்ணிக்கொண்டான்.

(வரும்)

தேன்பட்டினம் - மீனாக்ஷிசுந்தரன்.

திராவிடர் வைத்திய நூலாராய்ச்சி.

சிலநாட்களுக்கு முன் சீர்பெறுங் கலைமகள் வாயிலாகச் சிற்றறிவுடைய நான் வெளியிட்ட "பாரததேச ஔடதப்பிரயோகம்" என்னும் வியாசத்தைக் கண்ணுற்ற நண்பர் சிலர் அதுபற்றியதம் அபிப்பிராய பேதத்தைத் தெரிவித்தனர். அதிற்கூறிய விடயம் முக்கியமாய்ப் பூண்டுகளின் உபயோகத்தை நாடினதாக விருத்தலால், அவ்வகை யனுபோகம் மக்கள் நீடூழிகாலமாய்ப் பலவிதப் பூண்டுகளைக் கையாண்டு, இன்னவை இன்ன குணந்தருமெனத் தெரிந்து, கல்வி அறிஞர் நேர்ந்த காலத்து அதைச் சாத்திரமாக எழுதியுள்ளாரென அன்னவர் தர்க்கித்தனர். அதன்றியும் தற்காலம் மேல்நாட்டார் ஆயுள்வேத சாத்திரத்தில் அபிவிருத்தி யடைந்திருப்பதுபோல், முன்னோர் வாகட விதியன்றி, வேறு பாகங்களில் சிறந்திருந்தார்களென்று விளங்கவில்லை யென்றும் சிலர் புகலத்துணிந்தார். ஆயுள்வேத சாத்திரத்தில் முக்கியப் பிரிவாகிய உடற்கூறு முதலியவை எந்த நூலில் பண்டைநாட் பண்டிதர்கள் செப்பியுள்ளாரெனவும் வினவினர். இக் குறிப்பைச் செவியுற்று, நம்முன்னோர் ஆயுள்வேத சாத்திரத்தைப் பழுதுபடச் சொல்லுவது தகுதியல்லவெனக்கருதி, சிலநூற்களை ஆராய்ச்சி செய்யப் புகுங்கால், அதிநுட்பமான விடயங்கள் கிடைத்தன. அவைகள் மேற்கண்ட கேள்விகளுக்குத் தக்க விடைகளெனப் பின்வருவனவற்றால் அறிஞர் காணுவர்.

தற்போது மேல்நாட்டார் ஆயுள்வேத சாத்திரத்தில் மிக்க அபிவிருத்தி அடைந்துள்ளாரென நமக்குத்தெரியும். இரண சிகிச்சை, சவச்சோதனை இவைகளை நன்குணர்ந்தவரெனவும் நமக்கு விளங்குகிறது. அத் திறமைசாலிகள் பல வாராய்ச்சிசெய்து ஓர் விடயத்தைத் தம்மியல்பாய்க் கண்டவுடன் அதைத் தங்சேசச் சங்கத்தார் அநுமதிக் குட்படுத்துவர். அச்சங்கத்தார் அது கோதில்லாதனவென்று உரைத்தபின்னர், புத்தகமாக வமைக்கப்பட்டு வெளிவருமென்பது நமக்குத் தெற்றெனத் தெரியும். இவ்விதம் ஓர் பாஷையில் வரைந்த நூலை இதர தேசச் சாத்திரிகளும் அங்கீகரித்து, தத்தம் பாஷைகளில் மொழிபெயர்த்துப் போதிப்பர். மேற்கூறியதுபோல் திராவிட நாட்டிலும் நடந்துள்ளது எனச் சொல்லப்புகுவது கூடுமோ என்றெண்ணுவர் சிலர். இத் தேசத்திலும் அவ்வண்ணமே பண்டைநாளில் கல்விச்சங்கங்கள் இருந்தன வென்றும், அச்சங்கப்புலவர் அங்கீகரித்த நூற்களே வெளிவந்தன வென்றுஞ் சொல்லலாம். அதெங்ஙனமெனில், (தமிழ்க்களஞ்சியம்) ஆதிசங்கம் கி-மு-9000–வருடங்களுக்கு முன் ஏற்பட்டு 5000–வரையில் நின்றதாகவும், அச்சங்கத்து நூலே முதநூலெனவும், அவை கலியுக வாரம்பப் பிரளயத்தில் மறைந்தனவென்றும் சில சரித்திரப் போதகாசிரியர் உரைக்கின்றனர். தென்மதுரைப் பிரளயத்தில் அந்நூற்கள் மறைந்தனவென்பது சிலர் அபிப்பிராயம். இதன்றியும் கடைச்சங்க மிருந்தகாலத்தில், குலசேகர பாண்டியனிலிருந்து 59–வது சந்ததியாகிய பூப சூடாமணி பாண்டியன் ஆளுகையில் ஓர் பிரளயம் நிகழ்ந்ததென்றும், அதில் நக்கீரரே மீட்டு முயிர்த்தெழுந்து, குமரியாறும், எழுதெங்கநாடு முதலிய நாற்பத்தொன்பது நாடுகளும் கடல் வாய்ப்பட்டனவென்று கூறியுள்ளா ரென்றும் சிலர் உரைக்கின்றனர்.

இன்னும் பலர் கி–மு–450 ல் ஓர் வெள்ளம் பிறந்ததென்றும் அப்பிரளயத்துக்கு 400–வருடங்களுக்குமுன் அமைக்கப்பட்ட தமிழ்ச் சங்கத்தில் அகத்தியர் இருந்தாரென்றும் அபிப்பிராயப்படுகின்றனர்.

மேற்கண்ட விபரங்களால் சங்கங்கள் இருந்து மறைந்தன வென்று புலப்படுகிறது. அதன்றி, பிரளயகாரணங்கள் கற்பனை யல்லவென்பதை நிகழ்காலச் சின்னம் ஒன்றுகொண்டு நிரூபிக்கலாம். செங்கற்பட்டுக்கு அருகில் மகாபலி புரமென்ற ஓர் ஊர் உண்டு. இது யாவருக்கும் தெரிந்ததே. அவ்வூரின் கீழ்ப்பாகம் சிலநாட்களுக்கு முன் தான் கடல்வாய்ப் பட்டது. 1776 ம் ஆண்டில் அவ்வூர்க் கீழ்த்திசையின் கடல் மத்தியில், பொன் பூசிய கலசம் ஒன்று காணப்பட்டுக் கொண்

டிருந்ததென்றும், அக்கலசம் ஓர் கோபுரத்தின் சிகரமென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (Eneyelopédie modernre par M. Courtin 1828- Volume H. R. Page 399)

இதுபோல் எண்ணொணாக் காலங்களுக்கு முன் நடந்த பிரளயச் சேதங்களுக்குத் தற்போது உறுதிப்பிரமாணம் எடுத்துக்காட்டுவது கடினம். ஆகையால் முற்காலத்துப் பிரளயங்களுக்கு முன் கல்விச்சங்கங்கள் இருந்தன. சாத்திரிகளும் இருந்தனர். கலைவல்லவர் நூற்கள் எழுதிச் சங்கத்தில் அரங்கேற்றி வந்தனர். அதுபோலவே வடதேசத்தினின்று அகத்தியர் தென்னாட்டுக்குச்சென்று சங்கத் தமிழ்கற்று ஆயுர்வேத நூற்களை வரைந்தாரென்று தெரிகிறது. அவரன்றியும், போகர், புலிப்பாணி, தேரையர், பதினெண்சித்தர்கள் எழுதிய நூற்களில் மறைந்தனபோகச் சில நின்றனவாகக் கொள்ளப்படுகின்றன. இந் நூற்களில் ஒவ்வொரு பகுதியும் சங்கிரகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அச்சுருக்கத்துக்கு விரிவான மூலபுத்தகங்கள் இருந்திருக்கவேண்டும். தற்போது சொற்பமாய்க் கிடைத்திருக்கும் நூற்களில், மேல்நாட்டார் சாத்திரங்களிற் கூறியுள்ளவைகளுக்கு ஒத்த விடயங்கள் ஏதாகிலும் உண்டாவென்று வினவினால், அதி அபூர்வமான பாகங்களும் பண்டைநாள் சாத்திரிகள் எழுதியுள்ளார் என்று எடுத்துரைக்கலாம்: மேல்நாட்டு ஆயுள்வேத சாத்திரக் கிளைகளில் அநுபோகத்துக்கு உதவாத சில பாகங்களும் உண்டு. அவற்றுள் ஜனனபாகத்தை (Embryologie) விசேடமாய் அங்கவிவா சாத்திர போதகர்களன்றி அநுபவ வைத்தியர்கள் எத்திறமையுடையவர்களாயினும் கவனித்தல் அரிது. அவ்வரிய பாகத்தை யூகிமா முனிவரின் வைத்தியசிந்தாமணி என்னும் நூலில், இப்போது மேல்நாட்டார் நூற்களில் எவ்வண்ணம் காணப்படுகிறதோ, அதற்கு ஒப்ப வரைந்திருக்கிறது. அவர் அவ் வத்தியாயத்தைத் தத்துவ விதியென்று பிரித்திருக்கிறார். அவர் இச்சடவுற்பத்தி இறைவன் செயலுக்கிணங்கியதென்று எண்ணித் தத்துவபாகத்திற் சேர்த்தார்போலும். அங்ஙனமின்றி ஆயுள்வேத சாத்திரத்தின் ஓர் பாகமாகிய அங்கவிவாநூலில் (Anatomie) தேக உற்பத்தி விபரமென்றெழுதி யிருந்தால் மேல்நாட்டார் வழியைத் தொடரும் நமக்குத் தெளிவாகத்தோற்றும்.

(வரும்.)

நடராஜன்,

Officier de Santé.

பரமபத சோபானம்.

N. B.—தபஸினால் பாபம் நசித்தவர்களும், சாந்தர்களும், விஷய போகங்களில் இச்சை குன்றியவர்களும், சதாபேரானந்தத்தையும் பரம சிரேயஸையும் கொடுக்கக் கூடியதான மோக்ஷத்தில் அதி தீவிரதரமான விருப்புடையவர்களுமான உத்தமாதிகாரிகளை யுத்தேசித்து இச் சிறு வியாசம் வெளியிடப்படுகின்றது. இதில் சிற்சில அபிப்பிராயங்கள் வேதமுரணாக ஆங்காங்கு ஸ்தூல திருஷ்டிக்குப் புலப்படின், அவற்றை யவ்விதம் கொள்ளாமல் சற்று ஊன்றிப்பார்த்தால், அவையாவும் வேதங்களின் முடிவான சித்தாந்த பக்ஷமெனச் சிறந்த வித்வான்கள் கண்டு மகிழ்வர்.

இவ்வுலகில் எல்லாமாந்தர்களும் அவரவர்கள் மனநேர்மைக்குத் தக்கபடி சுகத்தை யடைய முயலுகின்றார்களென்பது எங்கும் அனுபவ சித்தம். அவ்விதம் எல்லோராலும் சுகமே கோரப்படுவதா யிருக்க, பெரும்பான்மையோருக்குத் தினையளவும் அச் சுகம் அடையப்படாமல் போவதென்ன! அஹோ, ஆச்சரியம்!! இதுமாத்திரமன்று. என்றும் எவராலும் வேண்டப்படாததாயும், எவ்விதத்திலும் நிவர்த்திக்க முயன்று வருவதுமாகிய துக்கமென்னும் ஓர்பிணி எல்லா ஜீவராசிகளையும் வருத்துவதை நாம் பிரத்யக்ஷமாய்க் காண்கிறோமே!!!

இவ்வாறு, பலராலும் முயற்சிசெய்து அடைய வெண்ணும் சுகம் கிட்டாமலும், ஒருவராலும் வேண்டப்படாம லிருப்பதுடன் வந்தக்கால் தடுக்க விரும்பும் ஜீவர்களுக்குத் துக்கத்தின் பீடையும் ஏன் நேரிடுகின்றது? காரணமின்றி ஒருகாரியமும் நிகழ்வதை நாம் எங்கும் எப்பொழுதும் நம் அனுபவத்தில் காண்கிறதில்லையே. ஆதலின் இங்ஙனம் நம் விருப்பத்திற்கும் முயற்சிக்கும் வெதிரிக்தமான (வேறுபாடான) பலன் ஏன் உண்டாகவேண்டும்? அவரைவிதை நட்டால் துவரை முளைக்குமானால், அதற்குக் காரண மிவ்விரண்டி லொன்றா யிருக்கவேண்டும்:

ஒன்று, நாம்போட்ட அவரைவிதையானது சொத்தையாயிருந்து, அது முளையாமல் மக்கிப்போக, அவ்விடத்தில், எக்காரணம் பற்றியாவது ஓர் துவரைவிதையானது சம்பந்தப்பட்டு அது முளைத்திருக்க வேண்டும்.

அல்லது, நாம் விதைக்கும் பொழுதே, குருட்டுத் தனத்தாலோ, அல்லது அவிவேகத்தாலோ, அவரைவிதை யென்று தவறுதலாய் எண்ணிக்கொண்டு துவரைவிதையை விதைத்திருக்க வேண்டும்.

மேற்கண்ட காரணங்களிரண்டிலொன்றினாலன்றி இச்சம்பவம் நிகழாதென்பது சிறுவருமறிவர். அங்ஙனமிருக்க, சுகத்திற்காகப் பாடுபட்டுத் துக்கமே யனுபவிக்கும் மாந்தரினியல்பைநோக்கி, சிறந்த அறிவாளிகளும் ஏன் பிரமித்து வருந்துகிறார்கள்? வித்வான்கள் உலகத்தில் மனிதருக்காகச் சுகஸாதனமென்று மதித்து எண்ணிறந்த கருவிகளை ஒவ்வொரு நிமிஷமும் சிருஷ்டித்துக்கொண்டிருக்கின்றனர். இன்னும் எவ்வளவோ ஸாதனங்களைப் படைப்பதற்காக அவற்றின் காரணகாரியங்களை யாராய்ந்துகொண்டு மிருக்கின்றனர். இத்தகைய மேதாவிகள் ஒருநிமிஷமாகிலும் தங்கள் மனதை நிறுத்தி அவர்கள் சிருஷ்டிக்கும் சாதனங்கள் அவர்கள் கோரிய சுகத்திற்கு எவ்வளவுதூரம் பயன்படுகின்றனவென்று ஆலோசித்து, அவர்கள் சிறந்த மதியைக்கொண்டு, துக்கமென்னு மிப்பிணியின் காரணகாரியங்களை யாராய்ச்சிசெய்து, அதனை நீக்கவேண்டிய சாதனங்களை (காலதேச வர்த்தமானத்தை யனுசரித்து)க் கண்டுபிடித்து உலகினர்க்கு அப்போதைக்கப்போது பயன்படுத்துவாராயின் எவ்வளவு மேன்மையாயிருக்கும்! ஆனால் அத்தகைய புண்ணியர் இப்பொழுதில்லையோவெனின், அவர்கள் (எம்போலியரைக் கணக்கிட்டு ஒப்பிடும் பக்ஷத்தில்) மிகக் குறைவே.

(வரும்)

M. V. சுப்ரமண்ய ஐயர்,
Pakala.

பிறப்பிறப்பு.

(வெண்டாமரை ௬, இதழ் ௨, 25-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி முற்கூறிய மானிட யோனிகள் துயரத்துட் சிறிதுரைக்குதும். மாதாவின் கெற்பத்திற் படுந்துயரனைத்தும் பட்டுப் பூமியின் கண்ணே பிறந்தும் மனிதர்கள் வேதாகம வாக்கியங்களை ஓதி யுணர்ந்து கதியடையாமல் வீண் காலங் கழித்துப் பிறப்பிறப்பிலேயே சுழன்று திரிகின்றார்கள். மேலும் அன்னையின் கெற்பத்தில் அனுபவித்த துன்பத்திற்களவில்லை. பின்னரும் பிறப்பதினால் துன்பமே பெரிதுமாம். அன்றியும் தனது மறதி நீங்கும்பொருட்டும் நன்னூலுரைகள் தங்கும்பொருட்டும் வித்தை கற்றுக்கொள்ளும்பரியந்தம் பிதாவும் உபாத்தியாயரும் கோபிப்பதனாலுந் துன்பமே. இவையிற்றை அறிந்துவைத்தும் ஞானவான்கள் அருளிய அருள் வாக்கின் பொருளை ஆராய்ந்து அவர்க

ளடைந்த நன்மையை அடைய விரும்பாது பெண்கள்மீதும் புத்திர மித்திர களத்திராதிகள் மீதும் வாஞ்சையுற்றுப் போக மோட்சங்களிரண்டனையுமிழந்து துன்புறுவார்கள்.

பின்னரும் பேதையர்களாய்ப் போகமே பெரிதென்போர்கள் பிணத்தை விரும்பிய நாய்கள் தம்முள் வேறுபட்டுக் கதங்கொண்டு ஒன்றனையொன்று குரைத்துக் கடித்துக்கொள்வதுபோலக் காமம் மீதூரப்பட்டுத் துர் நாற்றத்துப் புழுப்பொதிந்த பெண்களுடல்மேற் காமுற்றுத் தம்முள் வேறுபட்டு அவ்வுடலைத் தோயும்படி அடித்துக்கொள்வார்கள். அப்படி அடித்து வென்று அவ்வுடலை அனுபவிப்போர்தாமும் எள்ளளவினதாகிய இன்பத்திற்கு மலையளவு பெருந் துன்பைச் சுமப்பார்கள். எத்தச்சால் எண்ணி இறைக்கமாட்டாதவரா எண்ணில் கலைகளைக் கற்றுநிலை காண்குவர்? இன்னும் மனிதர்கள் பெரும்பொழுதாறனுள்ளும் முன்பனியால் மார்கழி தையினும் பின்பனியால் மாசி பங்குனியினும் முதுவேனிலொடு காற்றினால் ஆனி ஆடியிலும் குளிரினால் ஐப்பசி கார்த்திகையிலும் மழையால் ஆவணி புரட்டாசியிலும் இளவேனியால் சித்திரை வைகாசியிலும் துன்புறுவர். அம்மட்டோ! சிறு பொழுதாறனுள்ளும் மலோபாதியாற் காலையிலும் மிகுபசியாலுச்சியினும் காமமீக்கொள்ளலால் மாலையினும் மற்றைய முப்பொழுதினும் மேலைய பசி காமங்களுக் கேற்ற தொழில் புரிதலானும் துன்பத்தையே சாலவுந் திளைப்பர். ஐயையோ! கடிகை தற்பரை விதற்பரையாயினுந் துன்புறு காலமன்றிச் சுகமுறு காலமுமுளவோ? இங்ஙனந் துன்புறுவதேயன்றி நீரிற் குமிழி போன்ற யாக்கையை நிலையுடையதெனக் கொண்டு கைப்பொருள் தேடுங்காலும் அதனைக் கவரும் கள்வர்க்கஞ்சிக் காக்கும்போதும், அதனைப் போற்றி அனுபவித்தற்குரிய இல்லஞ் சமைக்கும்போதும் அவ்வில்லம் நெருப்பால் நீரால் காற்றால் அழியுமிடத்தும் துன்பமே! துன்பமே! மற்றும் அவ்வில்லிடை ஆளுதற்கு வேண்டும் பண்டங்களத்தனையும் தேடுழியும் துன்பமே! அங்ஙனம் எத்தனை பண்டங்கள் தேடினாலும் உண்பதோர் நாழியரிசியின் பதமே! உடுப்பதோர் நான்குமுழத் துணியே! பத்தடுக்கு மெத்தை பரவக் கட்டினும் படுக்குமிடமோர் சிறு கூடமே! விரிப்பதும் ஓர் சிறு பாயல் மட்டே! ஐயோ! ஐயோ! இதற்கே எம் வாழ்போழ்தனைத்தும் போக்கிப் பாவந் தேடுவதல்லது “அரைமாத்திரைக்குள்ளடங்குமடி”ப் போதை உன்னலாம் புண்ணியம் செய்கிலம்.

(இன்னும் வரும்.)

ந. கண்ணுச்சாமிப்பிள்ளை,
சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை.

பலசரக்குக் கடை.

ஒரு உபன்னியாசம்.

1918-ம் ஆ௵ மார்ச்சு மாதம் 3-ம் உ புதுவையில் ஆநந்தாசிரம சாது மகா சங்கத்தின் ஆதரணையின்கீழ்க் கூடிய மகாசனசபையில், சென்னை ஸ்ரீமத் சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கள், "சீவகாருண்ணியம்" என்பதுபற்றி ஓர் இனிய உபன்னியாசம் செய்தார்கள். மேற்படி சங்கத்தின் உதவி அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந் ஜெகநாதநாயடுகாரு, சுவாமிகள் உபன்னியாசத்தை யெடுத்துப் பாராட்டி, சுவாமிகளுக்கு வந்தனம் செலுத்தினார்கள். சீவ வதை பெருகிவரும் இக் காலத்தில் இத் தகைய உபன்னியாசங்கள் அடிக்கடி நடைபெறச் செய்வது நன்மையேயாகும்.

⁂

பூமி அசைவு.

இம் மாதம் 12-ம் தேதியில் சீனாவைச் சேர்ந்த ஸவாடோ என்ற இடத்தில் ஒரு பூமியசைவு உண்டாயிற்று. அதனால் பெருத்த சேதமேற்பட்டது: அங்கிருந்த வீடுகளனைத்தும் அறவே யழிந்துவிட்டன. ஐரோப்பியர் வீடுகளெல்லாம் மிகவும் பழுதாய்விட்டன. சுமார் 2000 பேர் இறந்தொழிந்தனர். பல ஐரோப்பியர்கள் கப்பலேறிச் சென்று தப்பிப் பிழைத்தார்கள். இது கடவுள் கோபம்போலும்!

⁂

கள்ளுக் கடைகளைக் குறைத்தல்.

சேலத்தில் 14 கள்ளுக் கடைகள் இருக்கின்றனவென்றும், அவற்றில் 11 கடைகளை எடுத்துவிடவும், சந்தை, திருவிழாக்கள் நடக்கும் சமயத்தில் கள்ளுக் கடைகளை மூடிவிடவும் அதிகாரிகள் முடிவுசெய்திருக்கின்றார்களென்றும், அம் முடிவின்படி ஒருவருடம் பரீட்சார்த்தமாக மேற்படி கடைகளை நடத்த கவர்ன்மெண்டார் உடன்பட்டிருக்கின்றார்களென்றும் கேள்விப்படுகின்றோம். கள்ளுக்கடைகளோடு சாராயக் கடைகளையும் ஒவ்வோரிடத்தும் அவ்விதமே நடத்துவார்களானால் குடித்துக் கெடும் தீய வழக்கம் நாளடைவில் குறைந்து நாட்டுக்கு நன்மை விளையுமென்பதில் ஐயமேயில்லை.

⁂

இந்தியா மந்திரியின் தந்தி.

பிரிட்டிஷ் இந்தியா மந்திரி மேற்படி இந்தியாவிலுள்ள இராஜப் பிரதிநிதிக்கு ஐரோப்பிய போர்முனையைப்பற்றி வாரந்தோறும் அனுப்பிக்கொண்டுவந்த தந்தி சமாசாரம் இனிமேல் அனுப்பப்படமாட்டாதென்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதாம். காரணம் என்னையோ?

விளக்குமாற்று வெண்சாமரை.

கல்கத்தா பிரசிடென்ஸி கோர்ட்டில் ஒரு வேடிக்கையானவழக்கு நடைபெற்றது. வழக்குக் கொண்டுவந்தவர் 66 வயதுள்ள கிறிஸ்தோதாஸ் என்னும் கிழவர். அவர் வாக்குமூலம் பின்வருமாறு: தமது முதல் மனைவி சிலகாலத்துக்கு முன் இறந்துவிட்டதாகவும், பின்னர், இப்போது பிரதிவாதியாக நிற்கும் சிறு பெண்ணை அவளழகுக் காசைப்பட்டு மணஞ் செய்துகொண்டதாகவும், அதுமுதல் அவள் நடத்தையை நுட்பமாகத் தாம் கவனித்துவந்ததாகவும், அது அவளுக்கு விருப்பமில்லாமலிருந்ததாகவும், ஆதலின் அவள் பல்விதமாகத் தம்மை வருத்தப்படுத்தி அடிக்கவும் தொடங்கினதாகவும், அவற்றை யெல்லாம் தாம் பொறுத்துக் கொண்டு வந்ததாகவும், இப்போது சமீப காலத்தில் ஒருநாள் விளக்குமாற்றால் தம்மை நன்றாகப் புடைத்துவிட்டதாகவும் அவர் கூறி முறையிட்டார். கோர்ட்டிலுள்ளவர்களெல்லாம் குலுங்க நகைத்தார்களாம். நியாயாதிபதி கண்டித்தலே போதுமென்று அவளைக் கண்டித்து அனுப்பி விட்டனராம். சிறு பெண்களை மணக்க விரும்பும் மதிகெட்ட கிழவர்கள் இதனைப் படிக்கட்டும்.

*
* *

பைத்தியக்காரர்களுக்கு உதவி.

பிரான்சுக்காரருக்குச் சொந்தமான புதுச்சேரி, மாயை, ஏனம் முதலிய இடங்களி லிருந்துவரும் பைத்தியக்காரர்கள் சென்னை மாகாணத்திலுள்ள பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று உத்தரவு செய்திருக்கின்றனர். இது நன்மையான காரியமே.

*
* *

ஒரு கெட்டிக்காரத் திருடன்.

கல்கத்தாவிலுள்ள மல்லிகம்பெனியில் ஒருவன் வந்து சில ரப்பர் டையர்கள் வேறொரு கம்பெனிக்குவேண்டும், அக்கம்பெனிக்கு அந்த டையர்கள் வந்தவுடன் பணத்தைவாங்கி யனுப்புகிறேனென்று கூறி 367¾ ரூபாய்க்கு டையர்களை வாங்கி ஒரு கூலிக்காரன் வசத்தில் கொடுத்தான்; பணத்தை வாங்கிக்கொண்டுவர, அக்கம்பெனியின் குமாஸ்தா ஒருவர் அவன் பின் சென்றனர். அவன் மற்றொரு கம்பெனிக்குச்சென்று, கூலிக்காரனை வெளியே நிறுத்திவிட்டு, உள்ளே அக்குமஸ்தாவுடன் சென்று அவரை ஓரிடத்தில் உட்காரவைத்து விட்டு, பின்பக்க வழியாய் வெளியேவந்து, பணத்தைக் குமஸ்தாவிடம் கொடுத்துவிட்டேனென்று கூறி, கூலிக்காரனிடத்து டையர்களை வாங்கிக்கொண்டுபோய்விட்டான். அதனால் குமஸ்தா ஏமாந்துபோய்விட்டார்—என்று லோகோபகாரி கூறுகின்றது. இது வியாபாரிகளுக்கு ஓர் எச்சரிக்கையாகும்.

தமிழ் வேத பாராயண சபை.

காஞ்சிபுரம் தாலுக்கா 4-ம் நெ. விசூர் கிராமத்தில், காஞ்சி ஸ்ரீமான் பி. சே. முருகேசமுதலியார் அவர்களால் தாபிக்கப் பெற்ற இச் சபையின் முதல் வருடோற்சவம், 20–1–18-ல் உத்திரன்மேரூர் திருவன். கா. மு. பொன்னுசாமிமுதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் இனிது நடைபெற்றது. அக்கிராசனாதிபதியவர்கள் முன்னுரையாக, தமிழ் வேதத்தின் பெருமையை யாவரும் ஆநந்தமுறும் வண்ணம் இனிமையாகப் பேசியபின்னர், கல்வி, புண்ணியம், நட்பு, சகோதரர் ஒற்றுமை என்பன, முறையே விசூர் திருவன் வி. த. மாணிக்கமுதலியார், திருவன் க. தங்கவேலுமுதலியார், திருவன் சு. முனிசாமிநாயடு, திருவன் சோ. கோவிந்தராசுமுதலியார் இவர்களால் உபந்நியசிக்கப்பட்டன. முடிவில் அக்கிராசனர் ஒவ்வொருவருடைய உபந்நியாசங்களையும் எடுத்துப் பாராட்டிப் பலரும் வியக்கும்படி முடிவுரை கூறினர். அவ்வளவோடு தாம்பூலாதி உபசாரத்துடன் முதல்வருடோற்சவக்கொண்டாட்டம் முற்றுப்பெற்றது. இச் சபை என்றும் விளங்கும்படி எல்லாம் வல்ல இறைவன் திருவருளை யிறைஞ்சுகின்றேன்.

க. சரவணன்,
தமிழ்வேத பாராயண சபை, விசூர்.

புத்தக வரவு.

சிறுவர்க்கருதும் கதைப்பூங்கோத்து.

இச் சிறு நூல் சிறுவர்க்கென எளிய தமிழ் நடையில் எழுதப் பட்டுள்ளது. "கருடனும் பாம்பும்" என்பது முதல் "பொருளிழந்த புரந்தரன்" என்பது இறுதியாக 30 சிறு கதைகள் அடங்கப்பெற்றது. ஆசிரியர்கட்கு உதவுமாறு கதைகளின் கீழ் ஆங்காங்குப் பொருத்தமான சில செய்யுட்களும் சேர்க்கப்பட்டுள்ளன. சிறு கதைகள் வாயிலாகப்பல நீதிகளைத் தெரிந்துகொள்ளுமாறு வரையப்பட்டுள்ள இப் புத்தகம் சிறுவர்கட்குப் பயன்தரக் கூடியதேயாம். இதனை இயற்றியவர், சென்னைக் கிறீஸ்தவர் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதரா யிருந்த ஸ்ரீமத் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் குமாரர் ஸ்ரீ வி. சூ. நடராஜன் அவர்கள்.

கிடைக்குமிடம்: விவேகோதயம் அதிபர், மதுரை. அல்லது, பரிதிமாற் கலைஞன் புத்தகசாலை, 753, காக்கை தோப்புத்தெரு, மதுரை.

இதனை யனுப்பியவர்க்கு நமது நன்றியை யனுப்புகின்றோம். ப—ர்.

COCOANUT BUTTER OR COCOTINE.

தேங்காய் வெண்ணெய்

அல்லது

கொக்கோட்டின்.

இது கை படாமல் யந்திரத்தின் உதவியினால் தேங்காயிலிருந்து செய்யப்பட்டது.

சமையலுக்கு உபயோகப் படுத்திக்கொண்டு வருகிற நெய், கொழுப்பு, வெண்ணெய் முதலிய பதார்த்தங்களுக்குப் பதிலாக, மிகவும் சுத்தமாயுள்ள கொக்கோட்டின் என்ற தேங்காய் வெண்ணெயை நன்றாய் உபயோகப்படுத்தலாம்.

1917, 1918-ல் நடந்த மதராஸ் கைத்தொழில் காட்சியில் கொக்கோட்டின் உயர்ந்த தன்மையுடையதென நற் சாக்ஷிப் பத்திரம் கொடுக்கப்பட்டது.

விலை முதலிய விபரங்களுக்கு அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

பெஸ்ட் அண்டு கம்பெனி லிமிடெட்

மதராஸ் அண்டு புதுச்சேரி.